**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2025-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ம் நாள் வியாழக்கிழமை

**O.S. No.66/2025**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.1 வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அமலதாஸ் | தாலுக்கா | : | நாகப்பட்டினம் |
| த/க/பெ. | : | சந்தியாகு | கிராமம் | : | வேளாங்கண்ணி |
| | | | தொழில் | : | வியாபாரம் |
| | | | வயது | : | 62 |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.6 ஆவணமானது இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பின்னிட்டு வட்டாட்சியரிடம் பெறப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் 1, 2 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டதாக ஏதும் குறிப்பு உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள உத்தரவு குறித்து 1, 2 பிரதிவாதிகளுக்கு ஏதும் தெரியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1,2 பிரதிவாதிகளுக்கு மேற்படி உத்தரவு குறித்து எந்தவித அறிவிப்பும் அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனாரிடமிருந்து 2ம் பிரதிவாதிக்கு பட்டா மாறுதல் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டதா என்றால் சரிதான். பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு குடவாசல் தாசில்தார் பட்டா மாற்றம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பொதுவாக ஒரு தாசில்தார் பிறப்பித்த உத்தரவை அவரே ரத்து செய்ய சட்டத்தில் வழிவகை இல்லை என்றால் சரியல்ல. இந்த உத்தரவானது மேற்படி அதே தாசில்தாரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்பதால் வா.சா.ஆ.6 ஆவணமானது ஏற்கக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணமானது இயற்கை நிதி கோட்பாடுக்கு எதிரானது என்றால் சரியல்ல. இந்த நீதிமன்றத்தில் வா.சா.ஆ.6 ஆவணத்தை தாக்கல் செய்து பின்னிட்டுதான் 1, 2 பிரதிவாதிகளுக்கு தெரியும் என்றாலும், அதன்பேரில் 1, 2

பிரதிவாதிகள் மேல்முறையீடு செய்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல. மேற்படி ஆவணமானது தன்னிச்சையாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்பதால் இந்த வழக்கின் 1, 2 பிரதிவாதிகளின் உரிமையையும், அனுபவத்தையும் பாதிக்காது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் சட்டப்படி ஏற்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.10.16 16:30:42 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal